812

A. M. D. G.

வேளாங்காணி

அர்ச். ஆரோக்கியமாமரிபேரில்

# நவரெற்றினமணிமாலை.

812
2-12

இஃது

வேளாங்காணி வித்துவானும்

தமிழ் வைத்தியருமாகிய

மகா-௱-௱-ஸ்ரீ

ச. வேதநாயகம்பிள்ளை அவர்களால்

இயற்றப்பட்டு

நாகபட்டணம் வாட்டர் வொர்க்ஸ்

*P. W. D.* கண்டிராக்டர்

வேளாங்காணி

மகா-௱-௱-ஸ்ரீ அ. ஜெகநாதபிள்ளை அவர்கள்

பொருளுதவியால்

நாகபட்டணம்

ஸ்காட்டிஷ் பிராஞ்சு பிரஸில்

பதிபிக்கப்பட்டது.

1912.

Q6:417
N12
1204

## குருவணக்கம்.

*கலித்துறை.*

வேதாகமத்தினொளிப்பான சோதிவெளிப்பட்டுய்ய
பேதாபேதங்களெல்லாம் விளக்கிப்பிலப்படுத்தி
நாதா முன்னின்று நவில்வீரெனக்கு நலம்பெறுவென்
றோதாய் நவரெற்றின மணிமாலையென்று மோங்கிடவே.

OFFICE ... MADRAS 1917
1669
894.8111
812
3.12

A. M. D. G.

வேளாங்காணி

அர்ச். ஆரோக்கிய மாமரி

பேராலியற்றிய

# நவரெற்றின மணிமாலை.

---

## காப்பு.

### விருத்தம்.

நேரான நிர்ஞ்சனமே வொப்பில்லாத
நிர்மலமாய்க்காட்டி நிற்குமாசான் நீயே
சீரான சித்திகளை ரிஷிகட் கெல்லாஞ்
செய்வித்த நிரூபதஞ்சீர் மேற்கொண்டேன்
பேரான பூர்ணியே நின்பேராலோர்
புகழு நவரெற்றின மணிமாலை சொல்ல
வாராயென் மனத்தினிடை யன்புகூர்ந்து
வசனிப்பாய் நவமணியாய் விளங்கத்தானே.

---

### இரட்டைஆசிரிய விருத்தம் இராகம் தேசிகதோடி

812
Q6:41
812

பாடலாமெனவெண்ணி யிதயைத்திலுருகினேன்
பண்புமோர் சிறிதுமில்லாப்
பாவிநானென்செய்வே னொருகோடிமறையினும்
பகரவொண்ணாத வடிவை
தேடலாமென்னிலோ பரன்மறைவதாகவே
சிந்தைதனில் வைத்தமூலத்
தேவிதாயாகவே யாவுக்குமுதன்மையாய்
செய்தொழிற் கருவியதனால்
வீடெலாங்கட்டி விளையாடுமுலகாதீதம்
வித்தில்லா வேதரூபி
வேதமுறையாததோ மூவருள்சேயெனும்
விளங்குதாய் நேசமுன்னை

170464



நாடெலாம்புகழ்ந்துமெச்சும் வேளநகர்தன்னில்வாழ்
நாயகி ஆரோக்கியமென்னும்
நவமணிமனோன்மணி சிரோன்மணிதயாமணி
நவிலொணாமரி அம்மணி. (1)

வெடியுண்டுகொடியுண்டு முடியுண்டுகுடியுண்டு
வேதகோஷ்டங்க ளுண்டு
விதாணையதாகவே நவநாளுமுற்செவம்
வேடிக்கை பலவுமுண்டு
வடிவுண்டநாயகி நின்சந்நதிக்கெதிர்
வரையாழி யொலியுமுண்டு
மிடிகொண்டபேரு நின்னடிதொண்டுசெய்வர்காண்
மிதமிதமதாக வருளால்
படிநின்றுபோற்றுவர் துடிகொண்டுயேற்றுவர்
பற்பலவிதங் கடானும்
பக்திசெய்தானபின் முக்கியமதாகவே
பாதகாணிக்கை வைப்பர்
நொடிநவம்நடத்திடும் வேளநகர்தன்னில்வாழ்
நாயகி ஆரோக்கியமென்னும்
நவமணிமனோன்மணி சிரோன்மணிதயாமணி
நவிலொணாமரி அம்மணி. (2)

சீருற்ற வேளநகர் செல்வி ஆரோக்கியமரி
செய்நவ மெடுத்துரைக்கச்
சிறியனாயிர நாவடைந்தாலு முடியாது
செகமெலாம் நினது புதுமை
நேருற்றதாகையின் சீரற்ற வெண்மதியை
நிருவிகற் பத்தினிடைவை
நோயுற்றபேர்களுஞ்சீரற்ற பேர்களும்
நொந்து அழுதிடு போதிலே
காருற்ற மேகமாய் வாரிப்பொழிந்திடும்
கருணைப்பிரதாப வருளால்
கதிபெற்று நிதிபெற்று வினையற்று மதியுற்று
கரையற்ற மகிழாடுவார்

நேரிற்றுலங்கிடும் வேளநகர் தன்னில்வாழ்
　　நாயகி ஆரோக்கிய மென்னும்
　நவமணி மனோன்மணி சிரோன்மணி தயாமணி
　　நவிலொணுமரி அம்மணி. (3)

பாலனாய்ச் செனமித்த காலமுதலாகவே
　　பாபமே ரூபமாகி
　பலபேரிடத்திலும் அகமே படைத்தவன்
　　பரஸ்திரீகள் வாஞ்சை மோகன்
காலனாய் உயிர்வதைகள் செய்தே புசித்தவன்
　　கர்மியில் கர்மியானேன்
　களவு பொய் சூதுகோள் யாவுமுடைத்தவன்
　　கனவினுந்தீது நினைவன்
சீலனாய் வருகவொரு புண்ணியமதாயினும்
　　சிந்தியா நிர்மூடனை
　சீரடிக்காளாக் கப்புண்ணிய விசேடரை
　　தீட்சை செய்விக்க வருளாய்
நூலெலாம் புகழ்மெச்சும் வேளநகர் தன்னில்வாழ்
　　நாயகி ஆரோக்கிய மென்னும்
　நவமணி மனோன்மணி சிரோன்மணி தயாமணி
　　நவிலொணுமரி அம்மணி. (4)

இருளாகின்ற வுலகிடையேபரம்பொருளை
　　இமையோராதித்தர் முனிவர்
　இடையாதிருந்து தொழுதிடுவார்சௌந்தரியை
　　இனிதான வாசகமதால்
அருவாகின்றவளும் உருவாகிவந்தவளும்
　　அருளானரூப வொளியென்
　றறைவார்நிரந்தரமாய் ஒருகோடிமந்திரமாய்
　　அகிலாண்ட கோடிதோன்ற
கருவாகிவந்தவள்நீ பெரிதாயிருந்தவள்நீ
　　கலையாதி தந்தவளுமென்
　குருவாகிவந்துவனை யகலாதிருந்துதொழ
　　குறையாவரம் புரிகுவாய்

நறுமாமலர்ப்பொழியும் வேளநகர்தன்னில்வாழ்
　　நாயகி ஆரோக்கியமென்னும்
　நவமணிமனோன்மணி சிரோன்மணிதயாமணி
　　　நவிலொணுமரி அம்மணி (5)

மண்ணாசைகொண்டு நாளென்னாளுமிடுபயிர்
　　மனப்படி விளைந்ததில்லை
　மருவிச்சுகம்பெறவு மனையாட்டிதேடியும்
　　　மறலிகை வசமாயினள்
பண்ணுதபணிசெய்து தேடுகைப்பொருளெலாம்
　　பாழிலே போக்கிவிட்டு
　பலபேரிடத்தினும் நிதிவேணுமென்பதாய்
　　　பல்காட்டி மிடிமையுற்றேன்
எண்ணுதயெண்ணங்கள் யெண்ணியேயென்மனம்
　　ஏங்குதே தாங்குதில்லை
　இம்மட்டிலிடையாமல் முன்னிட்டுவந்துநீ
　　　இரங்கி ரெட்சித்தருளுவாய்
நந்நாடர்போற்றிடும் வேளநகர்தன்னில்வாழ்
　　நாயகி ஆரோக்கியமென்னும்
　நவமணிமனோன்மணி சிரோன்மணிதயாமணி
　　　நவிலொணுமரி அம்மணி. (6)

பண்ணுத கோஷ்டிபல பண்ணிடும் என்மனம்
　　பழக்கமெவையாது கேண்மின்
　பரஸ்திரீ குலஸ்திரீகள் யாபேரிடத்திலும்
　　　பழகிடும் உறவாடிடும்
உண்ணுதமஸ்துவினை யுண்ணிடும் பழிசெயும்
　　உளறிடும் கோபமூளும்
　உடலினை வளர்த்திடும் நிதிதேட வோடிடும்
　　　உறுதிபோல் பொய் பேசிடும்
கண்ணனபேரையும் யேமாத்தமேசெயும்
　　கபட நாடகமாடிடும்
　களவிலும் சூதிலும் தீதிலும் வாதிலும்
　　　காலங்கழிக்குதம்மா

நின்னுடை மாற்றியருள் வேளநகர் தன்னில்வாழ்
நாயகி ஆரோக்கிய மென்னும்
நவமணி மனோன்மணி சிரோன்மணி தயாமணி
நவிலொணுமரி அம்மணி. (7)

முன்னாள் செய்வினை துடர் ஊழாய்ச்சமைந்துமே
முற்றிப்பிராணனுடே
முன்னிட்ட சன்மமாய்ப் பின்னிட்டு வந்ததான்
முகிய வேதன் கட்டளை
தன்னுல் விதித்தேயல்லாது வேறுளதோ
தானுய்ச்சமைந்த தில்லை
தன்னறிவு கொண்டிதைப் பின்னறியலாமென
சாற்றிடும் சோதிடமநூல்
இன்னுளினுற்றமதி யென்னுளுமுற்றதறி
வில்லாத கொள்கை நாட
ஈன சந்திப்படும் மனதை நேராக்கிட
இது சமயமானதாலே
நந்நாளாயுதவிசெய் வேளநகர் தன்னில்வாழ்
நாயகி ஆரோக்கிய மென்னும்
நவமணி மனோன்மணி சிரோன்மணி தயாமணி
நவிலொணுமரி அம்மணி. (8)

நிதியைப்படைத்தவரை யுலகிற்றுதிப்பாது
நிலைநிற்பதேது குறியாய்
நதியில்ப்ரவாகமுறு சுழலுற்றமண்ணவைபோற்
பதிவிட்டு வேறுபதிபோம்
விதியைப்பொறுத்ததறி மதியைப்பெருக்கவுமுன்
விரையிட்ட தீவினையினுல்
விலைபட்டமாடுசுமை யெடுவித்தபான்மையென
கலைகெட்டு மாறியுடல்போம்
கெதியைகுறித்துமுனே பதியிற்செலுத்திவினை
அறிவைப்பிடித்த பிடிநில்
குணமுற்றசாந்தநிலை பெறுதற்குமாமரியென்
குறையைத்த விர்த்துதவிசெய்

நதிசுற்றியோடிசெழி வேளநகர்தன்னில்வாழ்
நாயகி ஆரோக்கியமென்னும்
நவமணிமனோன்மணி சிரோன்மணிதயாமணி
நவிலொணாமரி அம்மணி. (9)

விண்ணைப்படைத்திடையில் கோடிததிசூழ்ந்திட
விளங்கிரவி மதியாகினாய்
மேல்கீழூநடுவுமாய் காலாய்நிறைந்து அனல்
மிக்கசைய நீராகினாய்
மண்ணைப்படைத்ததில் எழுவகைத்தோற்றமாய்
மருவிசரம் அசரமானாய்
மணிமந்திரசித்தி யிருபானைந்துமுதலுற
மதங்களாய் விளங்கிஞானக்
கண்ணைப்படைத்தவர்கள் காணுவாரீதெலாம்
கதிமுத்திபெற வேண்டுமென்
கண்ணைத்துறந்தறிவை யுன்னத்துலங்கவை
கருதரியதேவதாயே
நின்னைப்பரிந்துபுகழ் வேளநகர்தன்னில்வாழ்
நாயகி ஆரோக்கியமென்னும்
நவமணிமனோன்மணி சிரோன்மணிதயாமணி
நவிலொணாமரி அம்மணி. (10)

முற்றிற்று.

## அர்ச். சவேரியார்பேரில் கீர்த்தனை.

இராகம்-தேசிக தோடி.

பல்லவி.

அன்னைபோலெங்கட் காதரவானவரே
அடியோர்மிடிதீர் கிருபைசெய்.

அநுபல்லவி.

நன்னய காடம்பாடிவாழ்—நாதனே நீயிவ்வேளை
உன்னியபணிசெய்தோம்—உற்றவழிபாடாக. (அன்)

சரணங்கள்.

1. நீதிகுலத்துதித்தசோதி—நினைவென்றுன்னும்
வாதிமகிழும்பிரக்கியாதி—சத்தியமறை
ஓதிமனுவை நெறியாயி—வழிபட்டுய்ய
ஆதிசேசு சபையின்—வேதியனாகிவந்த (அன்)

2. சிந்துதேசத்தில்நீரும—வந்துநற்போதகமீர்
ஐந்துவருடகாலம்—நொந்துமிகமெலிந்து
பந்துஜனமிவருகந்து—உறுதிமொழி
தந்துபாரமனுரை—என்றுஞ்செழிப்பித்தவா (அன்)

3. ஓதும்உமதுவாயெப்போதும்—திருநாமத்தை
ஏதும்கருமம்நிறைவேறும்—குறையில்லாமல்
தீதும்பலபிணிநோய்தீரும்—நின்நாமஞ்சொல்ல
போதும்போதுமென்றெப்போதுஞ்—செடமழியா (அன்)

4. வாராய்எமதுமுகம்பாராய்—கருணைவிழி
கூராய்நித்தியானந்தத்தில்சேராய்—அடியோர்களை
நேராய்உமதுஆசீர்தாராய்—முத்தியடைய
பேராய்குருசவேரியாராய்—புவியிலென்றும் (அன்)

முற்றிற்று.

S. B. PRESS NEGAPATAM. 12—48